www.tamilarangam.net

3ம் பக்கம் தொடர்ச்சி

தமிழீழ மக்களின் சுயதீர்ப்புக்கும் பாதுகாப்புக்கும் தேசிய சுய நிர்ணய உரிமைக்கும் உத்தரவாதம் அளிக்காத எந்தவொரு தீர்வையும் நாம் அங்கீகரிக்கப் போவதில்லை. இந்த எமது உறுதியான செயற்பாடாக இருந்தது ஆனால் சிங்கள அரசு எமது நிலைப்பாட்டை ஏற்றுக் கொள்ளவில்லை. தமிழீழ மக்களின் அரசியல் அபிலாசைகளைப் பிரதிபலிக்கும் அடிப்படைக் கோட்பாடுகளை எல்லாம் பரிசீலனை செய்யாமல் நிராகரித்து விட்டது. ஈழத் தமிழர்கள் ஒரு தனித்துவமான தேசிய இனமல்ல, அவர்களுக்குப் பாரம்பரியமான தாயகம் எதுவுமில்லை, அவர்களுக்குத் தமது அரசியல் தலைமையை நிர்ணயிக்கும் சுயநிர்ணய உரிமையில்லை என்ற ரீதியில் தமிழர்களது அரசியல் அபிலாசைகளுக்கு எல்லாம் கதவடைத்து விட்டது சிங்கள அரசு.

இந்த நிலையில் சிறிலங்கா அரசுடன் பேசுவதற்கு எமக்கு எவ்வித அடிப்படைக் காரணங்களும் இருக்கவில்லை. அப்படித் தொடர்ந்து பேசுவதில் எவ்வித அர்த்தமும் இருப்பதாகவும் தெரியவில்லை. எமது அரசியல் இலட்சியங்களைக் கைவிட்டு, எமது சுதந்திரப் போராட்டத்தைக் கைவிட்டு அடிமைகளாக சிங்களச் சர்வாதிகாரத்தின் கீழ் நாம் நசுக்கப்பட்டு வாழவேண்டும் என்று சிங்கள அரசு விரும்புகின்றது போலும்.

பேச்சுவார்த்தை என்ற மாயவலைக்குள் நம்மைச் சிக்கவைத்து சுதந்திர வீரர்களான எம்மை அடிமைகளாக்கி அழித்தொழிப்பதுதான் ஜெயவர்த்தனவின் நீண்டகாலத் திட்டம். பேச்சுவார்த்தை என்ற நாடகத்தில் போலிவேடம் பூண்டு உலகத்தையும், இந்தியாவையும் ஏமாற்றிக்கொண்டு, அதேசமயம் தமிழீழத்திலும் பயங்கர இனப்படுகொலையை தமிழர்களுக்கெதிராக கட்டவிழ்த்தும் விட்டுள்ளது சிங்கள அரசு. சிங்கள இராணுவத்தின் பேயாட்டத்தால் அப்பாவித் தமிழ் மக்கள் நூற்றுக்கணக்காகக் கொலைசெய்யப் பட்டுள்ளார்கள் போர்நிறுத்தக் காலகட்டத்தில் மட்டுமே. கேந்திர முக்கியத்துவமும், தமிழர்களது வரலாற்றுச் சிறப்பும் உடையதான திருகோணமலையில் சிங்களமுப்படைகள் தமிழ் மக்களுக்கெதிராக ஒருபெரும் தாக்குதல் ஒன்றை மேற்கொண்டுள்ளனர். போர்கப்பல்களில் இருந்து பீரங்கிகளால் தாக்கியும் ஆகாயவிமானத்தால் குண்டுமாரி பொழிந்தும் நடாத்தப்பட்ட இந்த மிருகத்தனமான தாக்குதல்களில் 75 தமிழ்கிராமங்கள் முற்றாகச் சேதமாக்கப்பட்டன, நூற்றுக்கணக்கான அப்பாவித் தமிழ் மக்கள் படுகொலை செய்யப்பட்டனர், பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் தமது சொந்த மண்ணிலிருந்து அகதிகளாக விரட்டியடிக்கப்பட்டனர்.

இவ்விதமாக தமிழரின் தாய்ப்பூமியை கபளீகரம் செய்துகொண்டு, தமிழரை இனவாரியாக அழித்துக்கொண்டு சமரசம் பேசுவோம் வாருங்கள் என்கின்றது சிங்கள அரசு. அவர்களைப் பொறுத்தவரையும் பேச்சுவார்த்தை என்பது வெறும் கேலிக்கூத்து. தமிழினக் கொலையை மூடிமறைத்து இந்திய அரசை ஏமாற்றும் அடிப்படையிலேயே தாம் சமாதானப்பிரியர்கள் என்று போலிவேடம் பூண்டு அற்புதமாக நடிக்கின்றது சிங்கள அரசு. சிங்கள இனவாத ஆட்சியாளர்கள் ஒரு இராணுவத் தீர்வையே விரும்புகின்றார்கள் என்பது அவர்களது நடவடிக்கையிலிருந்தே தெட்டத் தெளிவாகியுள்ளது. நமது தேசிய சுதந்திரப் போராட்டத்தை ஒரு பயங்கரவாத கோரமாகத் திரித்துக்காட்டி சுதந்திரப் போராட்ட வீரர்களை ஒரு வன்முறைப் பித்தர்களாகச் சித்தரித்துக் காட்டி இராணுவ ரீதியாக எம்மை ஒழித்துக்கட்ட வேண்டும் என்பதே அவர்களது நோக்கம். இந்த இலக்கில் அவர்கள் முழு சிங்களத் தேசத்தையும் இராணுவமயப் படுத்தி வருகின்றார்கள். பெரியதோர் யுத்தத்திற்கு ஆயத்தம் செய்து வருகின்றார்கள்.

தொடர்ச்சி 6ம் பக்கம்

4ம் பக்கம்

**தமிழீழப் பகுதியில் (இலங்கையின் வடக்கு-கிழக்கு மாநிலங்களில்) இலங்கை அரசுக்குத் தெரியாமல் அக்டோபர் திங்களில் 23 நாட்கள் பயணம் செய்த மாவீரன் நெடுமாறன் அங்கே தான் கண்ட காட்சிகளை நினைவு கூர்கிறார்:-**

நான் ஈழத்தில் இருந்த அந்த 23 நாட்களும் நெருங்கிய உறவினர்களின் இழவு விட்டில் இருந்தது போன்ற உணர்வில்தான் இருந்தேன். அங்கே சந்தித்த எல்லா மக்களுக்கும் ஆறுதல் சொல்வதிலும் ஆறுதல் பெறுவதிலுமே இருந்தேன்.

தமிழீழத்தில் போராடிக் கொண்டிருக்கும் போராளிகள் அனைவரும் நல்ல இளம் பருவத்தில் உள்ளவர்கள். வாழ்வின் வசந்த காலத்தை அனுபவிக்க வேண்டிய வயதினர்.

தமிழர் சமுதாயத்தின் வரலாற்றில் இத்தகைய வீர இளைஞர்கள் இதுவரை தோன்றியதில்லை. உலகெங்கும் உள்ள தமிழர்கள் இது குறித்துப் பெருமைப்படலாம்.

வீரமே ஆரமாகவும் தியாகமே அணியாகவும் கொண்ட இந்த இளைஞர்கள் காலத்தில் உலகில் தமிழனுக்கு என்று தனி நாடு அமையாவிட்டால் இனி எப்போதும் அத்தகைய வாய்ப்பு இல்லாமல் போய் விடும்.

இலங்கையில் அமைதி நிலவ போர் நிறுத்த ஒப்பந்தம் வழி வகுத்து விட்டது என்ற மாயை இங்கு உருவாக்கப்பட்டு வருகிறது. ஆனால், உண்மை நிலைமை வேறு. போர் நிறுத்த ஒப்பந்தத்திற்கு முன்னால் செய்து வந்த அட்டூழியங்களை சிங்கள ராணுவம் ஒப்பந்தத்திற்குப் பின்னாலும் செய்து வருகிறது.

முன்பு தமிழர்களை அவர்களுடைய பாரம்பரியப் பிரதேசங்களிலிருந்து விரட்டி அடிக்க என்னென்ன காரியங்களை சிங்கள ராணுவம் செய்ததோ அவைகளை தொடர்ந்து செய்கிறது.

நான் அங்கு கணவன்மார்களை இழந்த தாய்மார்கள், பெற்றோர்களை இழந்த குழந்தை, சகோதரனை இழந்த சகோதரிகள், தங்கள் இளம் பிள்ளைகளை இழந்த தாய்மார்கள் என்று ஆயிரக்கணக்கானவர்களை பல முகாம்களில் சந்தித்தேன்.

இலங்கை ராணுவத்தாலும் சிங்கள கூலிப்படைகளாலும் தாக்கப்பட்டு சொத்துக்களை இழந்து, வீடுகளை இழந்து நிற்கும் அவர்கள் சொன்ன நிகழ்ச்சிகளைக் கேட்கும் பொழுது என் நெஞ்சு வெடித்து விடும் போலிருந்தது.

ஒரு பத்துவயதுச் சிறுமி தன் பெற்றோர்களை சிங்கள ராணுவத்தின் துப்பாக்கிக் குண்டுக்குப் பறிகொடுத்துவிட்டு தனது தம்பியையும் தங்கையையும் வைத்துக் காப்பாற்றப் பாடுபடுவதைச் சொல்லிய போது என் நெஞ்சில் ரத்தம் வடிந்தது.

இருபது வயதான இளம்பெண் தன் கணவனையும் ஒரு வயதுக் குழந்தையையும் சிங்கள ராணுவம் சுட்டுக் கொன்ற கொடுமையை விவரிக்கும்பொழுது மூர்ச்சையாகி விழுந்தார்.


முகாமில் வாடும் ஒவ்வொருவருடைய சோக நிலையும் இப்படித்தான். இவர்களுக்குச் சட்டபூர்வமாக எந்தவித உதவியும் செய்ய இலங்கை அரசு முன்வரவில்லை.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



# தமிழீழ யுத்த நிதி



## தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரன்

எனது அன்பான தமிழீழ மக்களே!

விடுதலைப் போராட்டம் என்பது இரத்தம் சிந்தும் புரட்சிகர அரசியல் பாதை. கல்லும் முள்ளும் நிறைந்த கடினமான பாதை. வியர்வை சிந்தி, இரத்தம் சிந்தி, தாங்கொணாத் துன்பத்தின் பரிசாகப் பெறுவது தான் சுதந்திரம். சுதந்திரம் இல்லாமல் மனித வாழ்வில் அர்த்தமேயில்லை. நாகரிகம் தோன்றிய காலம்தொட்டு இன்று வரை, சுதந்திரம் என்ற உன்னத இலட்சியத்திற்காக ஒடுக்கப்பட்ட மனித சமூகங்கள் போராட்டங்களை நடத்தியிருக்கிறது, யுத்தங்கள் புரிந்திருக்கிறது, புரட்சிகள் செய்திருக்கிறது. சுதந்திரப் போராட்டங்களாகவே மனித வரலாறு அசைகிறது. இந்த சுதந்திரத்தை வென்றெடுக்காது போனால் நாம் நிம்மதியாக வாழ முடியாது. சமாதானமாக சந்தோசமாக வாழ முடியாது. சுதந்திரத்தை வென்றெடுக்காதுபோனால் நாம் அடிமைகளாக வாழவேண்டும், தன்மானமிழந்து தலைகுனிந்து வாழவேண்டும், பயந்து, பயந்து பதட்டத்துடன் வாழவேண்டும், படிப்படியாக அழிந்துபோக வேண்டும். ஆகவே சுதந்திரத்திற்காகப் போராடுவதைத் தவிர எமக்கு வேறு வழி எதுவுமில்லை.

நாம் போருக்குத் தயாராக வேண்டும். அடிமைகளாக வீழ்வதைவிட போராடி வாழ்வதே மேன்மையானது என்ற இலட்சிய உணர்வோடு நாம் ஆயுதம் ஏந்தத் தயாராகவேண்டும். ஈழத் தமிழ் மக்கள் ஒவ்வொருவரும் விடுதலை வேங்கைகளாக, வீரப் புலி இனமாக மாறவேண்டும். விடுதலை என்பது ஒரு தேசியக் கடமை. இதில் ஒவ்வொருவருக்கும் பங்களிப்புண்டு.

இந்த நெருக்கடியான கால கட்டத்தில் முழு சமுதாயமுமே பேரழிவை எதிர்நோக்கிய இச் சூழ்நிலையில் எம் மத்தியில் சுயநல வுணர்வுகள் களையப்பெற்று சமூக வுணர்வு, இனவுணர்வு பிறக்க வேண்டும். பணத்தை முடக்காமல், உணவு பண்டங்களைப் பதுக்காமல், தான் வாழ்ந்தால் போதும் என்ற தன்னலம் கருதாமல் வசதிபடைத்தோர் வசதியற்றோருக்கு உதவ வேண்டும். பணம் படைத்தோர் பட்டினி கிடப்பவர்களுக்கு உதவ வேண்டும். இது ஒரு தேசிய நெருக்கடி, இந்நெருக்கடியால் பிறக்கும் துன்பத்தை முழுத் தேசிய இனமுமே பகிர்ந்து கொள்ள வேண்டும். இந்த தேசிய சுமையை சமூகத்தின் அடிமட்டத்திலுள்ள ஏழைகள் மட்டும் தாங்கிக்கொள்ள அனுமதிப்பது நாம் எமது தேசத்திற்குப் புரியும் துரோகம் என்றே சொல்லவேண்டும்.

இறுதியாக ஒன்றை மட்டும் சொல்ல விரும்புகிறேன். ***தமிழீழம் என்றோ ஒரு நாள் உதயமாவது திண்ணம். சமதர்ம சமூகமாக எமது நாடு வளம் கொளிப்பது திண்ணம்.***

***இந் நம்பிக்கையில் ஆன்ம உறுதி தளராது விடுதலைப் பாதையை நோக்கி வீறு நடை போடுவோமாக.***

புலிகளின் தாகம்
தமிழீழத் தாயகம்

## காத்திடுவீர் தமிழ் ஈழத்தாயை

தமிழ் ஈழ மண்ணின் குலக் கொழுந்துகளே
தீர்த்திடுவீர் நம்தம் வேட்கைதனையே —அங்கே!
சாற்றிடுவீர் தமிழினத்தின் மகிமைதனையே நீவீர்
காத்திடுவீர் எங்கள் தமிழ் ஈழத் தாயை—.

தமிழ் தாய் படும் துன்பங்களைக் கண்டும்
ஈட்டி தாக்க மடக்கினேயா தமிழா—ஏன்!
உன் தன் குருதி ஏன் வெளுத்ததப்பா
காத்திடுவீர் எங்கள் தாயை—.

பகைவன் பிடியில் நம்மவன்
பட்டினியில் நம் தாய் மக்கள்
பீடையில் உறைகின்றனர் மூலையில் தமிழினமே!
காத்திடுவீர் எங்கள் தாயை—.

பல நாடுகளில் வாழும் தமிழ் தமிழ் இனமே
பற்றி எரியும் நம் தமிழ் ஈழத்தின் கதையைக்கேட்டிரா—நீவீர்
கையுதவியின்றேல் எவ்வுதவியாயினும் புரிந்து
காத்திடுவீர் எங்கள் தாயை—.

காலம்தான் போயிடுமின்றேல் இலங்கை
காவல்தான் மாறிடும் அங்கே!
தமிழினமே உன்தன் உரத்தத்தின் மத்தியில்
மீட்டிடுவீர் எங்கள் தமிழ் ஈழத்தாயின் சுதந்திரத்தை—.

அனுஷ்யா—

2ம் பக்கம் தொடர்ச்சி

நம்பி வைப்போம். அன்னை எம் மடலின் மூலம் அறியத்தருவோம், எனக் கூறி அடுத்த மடலில் உன்னைச் சந்திக்கக் காத்திருக்கிறேன்.

"புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்"

அன்பு நண்பன்
செபமலியர்.


## தமிழீழ யுத்த நிதி

நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்
நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்
ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்
அதுவுமற்றவர் வாய்ச் சொல் அருளீர்.

SOLT (U.K.)
... GREEN STREET
LONDON E7 8LF
TEL: 01-470 0388




விடுதலைப் புலிகளின் நிதி தேவையினை பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் SOLT ஆல் லண்டன் மாநகரில் வாழும் தமிழ் மக்கள் மத்தியில் "தமிழீழ யுத்த நிதி" உண்டியல் வினியோகிக்கப்படுகிறது. அன்புத் தமிழ் உள்ளங்களே! இவ்வுண்டியலை நீங்களும் பெற்று "சிறு துளி பெரு வெள்ளம்" என்பதற்கிணங்க, சிறு சிறு தொகையாக இட்டு பெரும் தொகையாக வாரி வழங்க முன் வாருங்கள்.

**இரத்தம் + வியர்வை + கண்ணீர் = தமிழீழ நாட்டின் விடுதலை.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

4ம் பக்கம் தொடர்ச்சி

சிங்கள அரசின் இந்த நாசகாரத்திட்டத்தை இந்திய அரசு புரிந்து கொள்ள வேண்டும் என்பதே எமது அவா.

ஜெயவர்த்தனா இனத்துவேசமுள்ள பாசிச சர்வாதிகாரியே அன்றி பரந்த நோக்குடைய சமாதானப் பிரியன் அல்ல. அவரது தனிப்பட்ட அரசியல் அகராதி தமிழர்களது கண்ணீராலும் இரத்தத்தாலும் எழுதப்பட்டது. அவர் அரசியலில் புகுந்த காலம் தொட்டு இன்றுவரை 50 ஆண்டுகளுக்கு மேலாக தமிழினத்தின் உரிமைகளைப் பறித்தெடுக்க கங்கணம் கட்டியுள்ளார். தமிழினத்தைப் படிப்படியாக ஒழித்துக்கட்டி இறுதியாக ஒரு சிங்களத்தீவாக, ஒரு பௌத்த நாடாக மாற்றுவதையே தனது வாழ்க்கையின் உன்னத இலட்சியமாக கொண்டவராவார். இந்த சிங்கள பௌத்த இன வெறியர் தமிழர்களது பிரச்சனையை சுமுகமாகத் தீர்த்து வைப்பார் என்று எமக்கு எள்ளளவும் நம்பிக்கையில்லை. ஜெயவர்த்தனே ஒரு சுத்திர தார அரசியல் வாதி என்பதையும் நம்பமுடியாத ஒரு ஏமாற்றுப் பேர்வழி என்பதையும் நன்கு உணர்ந்து கொண்டவர், முன்னள் பாரதப் பிரதமர் திருமதி இந்திராகாந்தி அம்மையார். ஜெயவர்த்தனே அரசு தமிழர்களது பிரச்சனைக்கு ஒரு நியாயமான தீர்வைத் தேடாது தமிழர்களை ஒழித்துக் கட்டுவதில்தான் முனைந்து நிற்கின்றது என்பதை தனது அனுபவமாகக் கண்டு கொண்டார். இதனால் அவர் ஜெயவர்த்தனா அரசு மீது வெறுப்பு கொண்டவராயும், தமிழீழத் தமிழர்கள் மீது அனுதாபமும் அக்கறையும் காட்டி வந்தார். புதிய பாரதப்பிரதமர் சமாதானப் பிரியர் தமிழர்களது பிரச்சனையில் தனிப்பட்ட அக்கறை கொண்டவர். தமிழ் மக்கள் கௌரவமாக, பாதுகாப்பாக, நிம்மதியாக வாழ வேண்டும் என விரும்புபவர். அவரது நற்நோக்கையும், நல்லெண்ண முயற்சியையும் ஆதரிப்பது போல் ஜெயவர்த்தனே அரசு நடித்துக்கொண்டாலும் சமாதான முயற்சியில் எவ்வித அக்கறையும் எடுக்காது, இந்திய அரசை தமிழீழ விடுதலைப்போராளிகளுக்கு எதிராக முடிந்து விடுவதில்தான் முற்று முழுதாக முனைந்து வருகின்றது ஜெயவர்த்தனாவின் இந்த நயவஞ்சக ராஜதந்திர சூழ்ச்சியை நாம் நன்கு அறிவோம். இதனை இந்திய அரசும் வெகுவிரைவில் புரிந்து கொள்ளும் என்பது எமது நம்பிக்கை.

தமிழீழத் தனியரசே எமது அசைக்கமுடியாத அரசியல் இலட்சியம். அந்த இலட்சியத்தை அடையவே நாம் உயிரை அர்ப்பணித்துப் போராடி வருகின்றோம். ஒடுக்கப்படும் எமது மக்களின் அரசியல் அபிலாசைகளும் அதுவே. வேறு எந்த தீர்வும் எமது மக்களின் பிரச்சனைக்கு தீர்வு காணது என்பதே எமது கருத்து. மேலும் உலகநாடுகளில் ஒடுக்கப்படும் மக்களின் சுதந்திரப்போராட்டங்களைக் கௌரவித்து ஆதரித்து வரும் பாரத நாடு தமிழீழத்தில் உள்ள எமது மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு ஆதரவு தரும் என்பதே எமது எதிர்பார்ப்பு. இந்திய மக்களின் அங்கீகாரம் எமக்குக்கிட்ட காலம் பிடிக்கலாம் ஆயினும் நாம் சளைக்காமல் தொடர்ந்து போராடிக்கொண்டே இருப்போம்.

தர்மமும் உண்மையும் எமது பக்கம் சார்ந்து இருக்கின்றது அதுவே எமது பலம். அதர்மமும் பொய்மையும் எதிரியின் பக்கம் சார்ந்து இருக்கின்றது அதுவே அவர்களது பலவீனம்.

ஈற்றில் வெற்றி கொள்வது நாம் ஏனெனில் என்றும் அழியாத தர்மம் எமக்குப் பக்க பலமாக இருக்கின்றது.

<u>புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்</u>

எஸ். சுப்பிரமணியன்
அரசியற்குழு
தமிழீழ விடுதலைப் புலிகள்

********************

6ம் பக்கம் தொடர்ச்சி

செய்வதுமில்லை. வீடு இழந்து, சொத்துக்களை இழந்து அனதையாக முகாம்களில் இருக்கும் தமிழர்களுக்கு விடுதலைப் போராளிகளும், மற்றவர்களும் நிதிதிரட்டி உதவுகிறார்கள். இதில்தான் அவர்கள் உயிர் வாழ்கிறார்கள்.

அங்கு நான் சந்தித்த அனைவருமே, இந்திரா காந்தி உயிரோடு இருந்திருந்தால் சிங்கள அரசு பயந்து கொண்டு இவ்வளவு அட்டூழியங்களைச் செய்யாது என்றார்கள். இப்பொழுது இலங்கை அரசு 'எதையும் செய்யலாம், இந்தியா கேட்காது' என்ற முடிவுக்கு வந்திருக்கிறது என்றார்கள்.

அங்கே சந்தித்த தமிழர் தலைவர்களில் ஒருவர், "இந்திரா காந்தி சுதந்திரப் போராட்ட வீரர். அதனால் அவருக்கு சுதந்திரப் போராட்டத்தின் அடிப்படைப் பிரச்னைகள் விளங்கும். ஆனால், ராஜீவ் காந்திக்கு சுதந்திரப் போராட்டத்தின் கஷ்ட நஷ்டங்கள் புரிய வழியில்லை" என்று சொன்னார்.

தமிழீழம் கிடைத்தால்தான் தமிழர்களுக்கு விடிவுகாலம் என்று கோயில் குருக்கள் அனைவரும் சொல்கிறார்கள்.

தமிழீழம் பகுதியில் 15,000க்கு மேற்பட்ட பிராமண வகுப்பைச் சேர்ந்தவர்கள் இருக்கிறார்கள். சிங்களவர்கள் கொடுமைக்கு ஆளாகியுள்ள சமூகங்களில் பிராமண சமூகம் முக்கியமானது. இதுவரை இந்துக் கோயில்களில் 50க்கு மேற்பட்ட குருக்கள் சுட்டுக்கொல்லப்பட்டிருக்கிறார்கள்.

சிங்கள ராணுவம் இலங்கையில் உள்ள இந்துக் கோயில்களில் புகுந்து மணி அடித்துபூஜை செய்யக்கூடாது என்கிறார்கள்.

கோயில் மணியை அடித்தால் போராளிகளுக்கு 'சிக்னல்' கொடுக்கிறாய் என்று சொல்லி குருக்களை சுட்டுத் தள்ளுகிறார்கள்.

அர்த்த ஜாம பூஜை நடத்தக் கூடாது; மாலை ஐந்து மணிக்கு மேல் இந்துக் கோயில்களை திறந்து வைத்திருக்கக் கூடாது என்று இலங்கை ராணுவம் உத்தரவிட்டுள்ளது. கோயில்கள் வழிபாட்டுக்குத் திறந்திருந்தால் உள்ளே புகுந்து சுடுகிறார்கள்.

சிங்கள கூலிப்படையினர் வேறு வேடம் புனைந்து கோயில் சொத்துக்களையும் நகைகளையும் சூறையாடுகிறார்கள். இந்தச் சமூக விரோதிகளை போராளிகள் தேடிப்பிடிக்கின்றனர்.

ஒரு குருக்களின் மகனும் மகளும் விடுதலைப்புலிகள் இயக்கத்தில் இருப்பதைப் பார்த்தேன். அது குறித்து அந்த குருக்கள் பெருமைப்பட்டார்.

இன்னொரு குருக்கள் சொன்னார்- "தமிழ்நாட்டிலுள்ள பிராமண சமூகத்தினருக்குச் சொல்லுங்கள். தமிழீழம் கிடைத்தால்தான் இலங்கையில் பிராமண சமூகம் உயிரோடு இருக்கும். இல்லையேல் சிங்கள ராணுவம் எங்களையும் கோயில்களையும் அழித்து விடும்" என்று.

தமிழர் பகுதியில் நடந்து வரும் இனப் படுகொலைகளையும் ராணுவம் தமிழர்களின் சொத்துக்களைப் பாழ்படுத்தியிருப்பதையும்,

தொடர்ச்சி 7ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

8ம் பக்கம் தொடர்ச்சி



லார்சனின் ஜீப் சாரதி காடுர்
சாகூன் ஒரு அல்ஜீரியன். அவ
னது தந்தையும், லார்சனும் உ
ருக்குயிரான நண்பர்கள்.
வரும் வியட்நாம் போ
சண்டையிட்டனர். அங்கு
ஒரு சண்டையில்,
காப்பாற்றும் முயற்சிய
யெட்மிங்குகளால்
காடுர் சா


# அகதிகள் கழகம்

# REFUGEES' ORGANIZATION

( U.K. BRANCH )

– GREEN STREET, LONDON E7 8LF 9

PROF. MICHAEL DUMMETT, NEW COLLEGE, OXFORD

...gees' Organization is here to help YOU !

Exp... ...ice available. Last week we dealt with 27 inquiries from refugees who are insecure, upset and very worried about the present and future.

Do you know that:

1. As an applicant for political asylum i.e. refugee status, one is entitled to supplementary benefit ( rent, subsistence and clothing allowance)?
2. If you rent an unfurnished flat or house then you can claim for furniture, curtains, kitchen equipment. You may be entitled to rate rebate if you are responsible for rates as well as rent.
3. Once one obtains the 6 month or twelve month visa, do not worry about subsequent visas. Collect up to date evidence on the situation in your home, town and country including letters from close relatives from your country or from India if the rest of your family are already refugees there. All evidence must be submitted when the passport is sent back for an extension before the expiry of your present visa. If your representative is dealing with it then make sure that your passport is given to him/her at least 14 days before the expiry date.
4. While there is no guarantee that you will finally obtain permanent (i.e, indefinite leave) residence you have a very good chance at the end of four or five years' in the U.K. of qualifying for such permanency. If your conduct is normal and free from criminal offences within that period then you will be all right. Remember that conviction in a court of law while you are a temporary resident here is usually followed by a recommendation that you should be deported. It is best to be on your best behaviour. You are not entitled to full benefits even if you have only a part time job.
5. You are also entitled to various other benefits such as advice and help from the local education authority, Man Power Services Commission, etc.

CONTACT US IMMEDIATELY IF YOU NEED ANY HELP!!

*HEAD OFFICE:* TRO, NO: 4. 21 ST. CROSS STREET, MADRAS – 600 020, INDIA


அந்த மக்கள் தாங்கள் படும் துன்பங்களை எடுத்துரைப்பதையும் 'வீடியோ' படங்களாக எடுத்து வைத்திருக்கின்றேன்.

பிரதமர் ராஜீவ் காந்தியைச் சந்தித்து நான் நேரில் கண்டவற்றை தெரிவிப்பேன். அது என்னுடைய கடமை ஆகும். இந்தியாவிலுள்ள மற்ற கட்சித் தலைவர்களிடம் உண்மை நிலையை எடுத்துச்சொல்ல விருக்கின்றேன்.

தமிழ்நாட்டில், தமிழீழ விடுதலை ஆதரவாளர் இயக்கம் (டெசோ) தமிழீழ மக்களுக்கு ஆதரவாக நடத்திய போராட்டங்களைக் கண்டு அந்த மக்கள் மன ஆறுதல் பெற்றிருக்கிறார்கள். தாங்கள் நிர்க்கதியாக விடப்பட்டுவிட்டோமோ என்ற நிலையில் இருந்த அந்த மக்கள் 'டெசோ' இயக்கம் தோன்றிய பிற்பாடு தங்களுக்கு குரல் கொடுக்க இனமானமுள்ள தமிழர்கள்-தமிழ்த் தலைவர்கள் இருப்பதுகண்டு நம்பிக்கை பெற்று வருகிறார்கள்.

தமிழ்ப் பகுதிகளில் சிவில் நிர்வாகம் என்பது ஏதுமில்லை. காவல் நிலையங்கள், நீதிமன்றங்கள், அரசுத் துறை அலுவலகங்கள் ஏதும் நடைபெறவில்லை.

தமிழர்கள் கடைகளை இலங்கை ராணுவம் இன்னும் சூறையாடிக் கொண்டிருக்கிறது. மன்னார் பகுதியில் அடியோடு மின்சாரம் கிடையாது. யாழ்ப்பாணம் நகரத்தில் மட்டும் மின்சாரம் இருக்கிறது. பஸ் போக்குவரத்து அடியோடு நிறுத்தப்பட்டிருக்கிறது. யாழ்ப்பாணத்தில் சில மினி பஸ்கள் காலை, மாலை வேளையில் செல்கின்றன. அதில் பள்ளிப் பிள்ளைகள் ஏறிச் சென்றால் அதில் ராணுவத்தினர் ஏறிக்கொண்டு, குழந்தைகளை முன்னால் தள்ளி ஒளிந்து கொள்கின்றனர். தாங்கள் போகுமிடத்திற்கு முதலில் சென்று இறங்கிக் கொண்டு பஸ்ஸை விடுவார்கள். இதனால் அந்தப் பள்ளிப் பிள்ளைகள் எப்பொழுது பள்ளிக்கூடம் போவார்கள் என்பது நிச்சயம் கிடையாது. இதனால் பல பெற்றோர்கள் தங்கள் குழந்தைகளை பள்ளிக்கூடத்திற்கு அனுப்புவதில்லை.

யாழ்ப்பாணத்தின் சில பகுதிகளைத் தவிர வேறு எங்கும் பள்ளிக்கூடங்கள் அனைத்தும் மூடிக்கிடக்கின்றன.

தமிழீழப்பகுதிகள் எங்கும் வங்கி வசதி கிடையாது. வங்கிகள் ராணுவ முகாமில் உள்ளன. இரண்டு நாட்களுக்கு முன்னால் சொல்லி விட்டு வந்து பிறகுதான் பணம் எடுக்க முடியும்.

வங்கிகளில் தமிழ் மக்கள் ரூ.200 கோடி அளவுக்கு தங்க நகைகளை அடகு வைத்திருந்தார்கள். இந்த நகைகளை கொழும்புக்கு எடுத்துச் சென்று விட்டார்கள். மக்கள் பணத்தைக் கொடுத்து நகையைத் திருப்பிக் கேட்டால் தர மறுக்கிறார்கள்.

அந்தத் தங்கத்தை திருப்பிக் கொடுத்தால் நீங்கள் அதை தமிழீழப் போராளிகளுக்குக் கொடுத்து விடுவீர்கள், அதை அவர்கள் ஆயுதம் வாங்கப் பயன்படுத்துவார்கள் என்று கூறி மறுத்து விடுகிறார்கள்.

இன்று துன்பப்பட்டுக் கொண்டிருக்கும் மக்களை விடுதலைப் போராளிகள்தான் பாதுகாத்துக் கொண்டிருக்கிறார்கள்.

சாலைகள் போடுவது முதல் பல உள்ளூர் தேவைகளை நிறைவேற்றுகிறார்கள். கிராம நிர்வாகங்கள் நடைபெற 'இணக்க சபை' என்ற அமைப்பை உருவாக்கியுள்ளார்கள்.

சுதேசி பொருட்களை உபயோகப்படுத்துவோம் என்ற உணர்வு தலைதூக்கியுள்ளது.

தமிழீழத்திலேயே சோப்புகளையும் தேங்காய் எண்ணெயும் தயாரிக்கிறார்கள். பழரசங்களையும் தயாரிக்கிறார்கள்.

விடுதலைப் போராளிகள் மக்களைப் பாதுகாக்கும் காவலர்களாக மட்டுமல்லாது மக்களின் சேவகர்களாகவும் விளங்குகிறார்கள்.

UNI BEAUTY SALOON



என்னை தமிழீழத்திற்கு அழைத்துச் சென்றவர்கள் விடுதலைப்புலிகள் அமைப்பைச் சேர்ந்தவர்கள்.

கண்ணை இமை காப்பதுபோல இரவு பகல் தூங்காது என்னை பாதுகாத்தவர்களில் நான்கு வீரத் தோழர்களை யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியாவுக்குத் திரும்பும் பொழுது சிங்கள ராணுவத்தினர் சுட்டுக் கொன்றிருக்கிறார்கள்.

சபா, லலித், லாரன்ஸ், ஜீவன் என்ற அந்த நான்கு தோழர்கள் வீர மரணம் அடைந்த செய்தி எனக்குக் கிடைத்த பொழுது என் வாழ்நாளில் அடையாத அதிர்ச்சி அடைந்தேன். அந்த வீர இளைஞர்களின் களை நிறைந்த முகம் என் நெஞ்சில் நிலைத்து நிற்கிறது.

விடுதலைப் போராளிகளின் எல்லா அமைப்பின் தலைமையிடங்களுக்கும் சென்றேன். தமிழீழப் போராட்டத்தில் எந்தத் தியாகத்திற்கும் அவர்கள் தயாராக இருக்கிறார்கள்.

சிங்கள அரசின் ராணுவத் தாக்குதல் கொடுமைகள், நித்தம் நித்தம் புரியும் கொலைகளைக் கண்டு அஞ்சாது தமிழ் மக்கள் உறுதியோடு இருக்கிறார்கள். அவர்கள் உணர்ச்சியும், ஊக்கமும், உறுதியும் நம்மை நெஞ்சு நிமிர வைக்கின்றன.

"தமிழீழ தாயகம்" அமைவது உறுதி என்பதை நான் உணர்ந்தேன்.

-ராஜராஜன்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# அல்ஜீரியா விடுதலை
## இரு கெரில்லா போராட்டம்

தொடர்ச்சி

கெரில்லாக்கள் சார்ந்துள்ள பொதுமக்களை நவீன உலகின் அனுகூலங்ககளால் (The benefits of modernity) வெல்வதும், சில உதவிகளை, சலுகைகளை அளிப்பதன் மூலம் புரட்சியில் நம்பிக்கை இழக்கச் செய்வதும், அடிமைத்தனமான அமைதியில் நிலைத்திருக்கச் செய்வதும் கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகளாகும். இக்குடியியல் நடவடிக்கைகள் புறம்பான அமைப்புக்களால் கையாளப்பட்ட போதும், ஒரு தனித்த இராணுவத் தலைமையின் கீழ் ஒருங்கிணைக்கப்பட்டன. பொதுமக்களின் எழுச்சியை முறியடித்து, சாந்தப்படுத்தும் திட்டத்தில் (Pasification Programme) பின்வரும் நடவடிக்கைகள் நடைமுறைப் படுத்தப்பட்டன.

1. அரசியல் அமைப்பை மாற்றியமைப்பது.

2. பொருளாதாரத்தை நவீனமயமாக்குவது; கைத்தொழிலைப் பெருக்குவது.

3. விவசாயத்தை விஞ்ஞான மயப்படுத்துவது.

4. வறுமையை ஒழித்து, வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவது.

5. கல்வி கற்பித்தல்.

6. வைத்திய, சுகாதார வசதிகளை ஏற்படுத்தல், பிள்ளை வளர்ப்புப் பற்றி அறிவுரை கூறுதல்.

7. மக்களைப் பாதுகாத்து, சமாதானத்தை ஏற்படுத்த சகல முயற்சிகளும் எடுக்கப்படுவதாக நம்பிக்கை ஊட்டல்.

8. சந்தை போன்ற இடங்களில் மக்களுடன் உரையாடி ஆறுதல் அளித்தல்.

9. உள்ளூர் மக்களின் பழக்க வழக்கங்கள், சம்பிரதாயங்களை மதிப்பது.

10. பொதுமக்களின் விழாக்களில் பங்கு பற்றுதல்.

11. ஊழல் நிறைந்த உள்ளூர் நிர்வாக அதிகாரிகளைப் பதவியிலிருந்து நீக்கல்.

அல்ஜீரிய மக்களின் விடுதலை உணர்வின் முன் பொருளாதார, சமூக, அரசியல் சீர்திருத்தங்களும், இராணுவ நடவடிக்கைகளும் ஆகிய கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகள் அனைத்தும் தோல்வி உற்றன.

## சமாதானப் பேச்சுவார்த்தை

### ஏகாதிபத்தியமும் மக்களும்

பிரெஞ்சு இராணுவம் செய்த பயங்கரப் படுகொலைகள், சித்திரவதைகள் உலகெங்கணும் பெரும் எதிர்ப்பை உண்டுபண்ணின. செற்றிவ் (Sétif) எனும் நகரில் வாழ்ந்த 34000 மக்களில் 28000 பேரை பிரெஞ்சுப் படைகள், ஒரு சில நாட்களில் கொன்றொழித்தனர். இவ்வரச பயங்கரவாதம் சாதாரண அல்ஜீரிய மக்களை மேலும் புரட்சி அணியில் சேர வழி வகுத்தது.

பிரான்சு தனது சொந்த நாட்டில் கடைப்பிடிக்கும் தாராள ஜனநாயகத்துக்கு இது விரோதமான கொள்கையாக இருந்தது. உலக அபிப்பிராயத்தில் பிரான்ஸ் கீழ்மட்ட நிலைக்கு இறங்கியது.

**F.L.N. சமதர்மத்தை தனது புரட்சிகரக் கொள்கையாகக் கொண்டிருந்தது. தேசிய விடுதலையும், சமதர்மப் புரட்சியும் ஒரு நாணயத்தின் இரு பக்கங்களைப் போன்று விளங்கின.**

பிடிபட்ட அல்ஜீரியக் கைதிகளைப் பயங்கரமாகக் கொடுமைப் படுத்திச் சித்திரவதை செய்தனர் பிரெஞ்சு இராணுவத்தினர். இன்னொரு மனிதனைத் துன்பப்படுத்தி அவன் படும் வேதனையில் மகிழ்வடையும் மிருக வெறி மனநோயாக (Sadism) இராணுவம் ஊடாகப் பிரெஞ்சு சமூகத்தில் பரவலாம் என்று அச்சம் தெரிவிக்கப்பட்டது. பிரான்சிலும் இதே முறைகளை உள்ளூர்க் குற்றவாளிகள் மீது பொலிஸாரும், இராணுவத்தினரும் பிரயோகிக்கலாம் என்று அபிப்பிராயப்பட்டனர் பிரெஞ்சுப் பொதுமக்கள்.

...ர்ச்சி

6ம் பக்க.

...செய்வதுமில்லை. வீடு இழந்து, சொத்...க்களை இழந்து அகதையாக ...காம்களில் இருக்கும் தமிழர் ...க்கு விடுதலைப் போராளிகளும், ...வர்களும் நிதிதிரட்டி உதவு...ள். இதில்தான் அவர்கள் ...ழ்கிறார்கள்.

பூர்வ... நான் சந்தித்த அனை... காட்டிரா காந்தி உயிரோடு களை வெ... சிங்கள அரசு ... இவ்வளவு அட்... உற்றன. ...து என்றார்ய தீவிர இடதுசாரிகளும, ... புத்தி ஜீவிகளும் போர் எதிர்ப்பு நடவடிக்கைகளை பிரான்சில் மேற்கொண்டனர். அல்ஜீரியப் புரட்சியாளருக்கு ஆதரவாகச் செயல்பட்டனர்.

2-ம் உலகப் போரில் நாசி எதிர்ப்பு இயக்கத்தின்..., தாம் எந்த அடக்குமுறை இராணுவத்திற்கெதிராகப் போரிட்டார்களோ, அதே கொடுமையான இராணுவமாக தம்மை கெரில்லாக்கள் தாக்குவதையும், கெரில்லாக்களது போராட்டத்தின் தார்மீக நியாயத்தையும் பல பிரெஞ்சுப் போர்வீரர்கள் உணர்ந்தனர். ஏராளமான பிரெஞ்சு இளைஞர் இராணுவத்தில் சேர மறுத்துச் சிறை சென்றனர். ஆயிரக்கணக்கானோர் இராணுவத்தை விட்டு ஓடினர். சில பிரெஞ்சுப் போர்வீரர்கள் புரட்சிக்கு ஆதரவாக புரட்சியாளருடன் சேர்ந்துகொண்டனர். பிரெஞ்சு இராணுவத்தில், அல்ஜீரியரைக் கொண்ட பிரிவிலிருந்து, பெருந்தொகையானோர் புரட்சியாளருடன் இணைந்து கொண்டனர்.

### புரட்சிகர உணர்வு

பிரெஞ்சு மக்களில், படைவீரரில் பலர் புரட்சிகரக் கருத்துக்களால் கவரப்பட்டனர். அவர்கள் அல்ஜீரிய விடுதலைப் போரின் தார்மீக நியாயத்தை, அப்போர் வெற்றி பெறுவதைத் தடுக்க முடியாத வரலாற்று நியதியை நன்குணர்ந்திருந்தனர். மேஜர் ஜோன் டீ லார்சன் எனும் பிரெஞ்சுப் படைகளின் ஒரு பற்றாலியன் கமான்டரும் ஏகாதிபத்தியத்துக்கும் அதற்கெதிரான தேசிய விடுதலைக்கும் இடையே சிக்கித் தடுமாறினான்.

தொடர்ச்சி 9ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



8ம் பக்கம் தொடர்ச்சி

லார்சனின் ஜீப் சாரதி காடுர் சாகூன் ஒரு அல்ஜீரியன். அவனது தந்தையும், லார்சனும் உயிருக்குயிரான நண்பர்கள். இருவரும் வியட்நாம் போரில் சண்டையிட்டனர். அங்கு நடந்த ஒரு சண்டையில், லார்சனைக் காப்பாற்றும் முயற்சியின் போது வியட்மிங்குகளால் கொல்லப்பட்டான் காடுர் சாகூனின் தந்தை.

தந்தையின் புனித நினைவை மகிமைப்படுத்த மகன் பிரெஞ்சுப் படையில் சேர்ந்தான். தன் சொந்த மக்களுக்கு எதிராகப் போராடும் நிலை அவனுக்கு ஏற்பட்டது. ஒரு முறை அவன் கண் முன்னுலேயே ஒரு கிராமம் அழிக்கப்பட்டு நெருப்பிட்டுக் கொளுத்தப்பட்டது. அப்பாவிகளும், குழந்தைகளும், பெண்களும் கலைத்துக் கலைத்து வேட்டையாடப்பட்டனர்; துடிக்கத் துடிக்கக் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். வெறி தீர்ந்து மகிழ்ச்சி ஆரவாரத்துடன் முகாம் திரும்பியது பிரெஞ்சு இராணுவம். சாகூனின் மனமோ சுக்கு நூருக உடைந்து விட்டது. இறந்து போன தன் சொந்த மக்களுக்காக அவனது இதயம் இரத்தக் கண்ணீர் விட்டது.

வாழ்க்கையின் முக்கியமான தீர்மானம் ஒன்றை எடுக்கும் நிலைக்குத் தள்ளப்பட்டான். பிரெஞ்சு இராணுவத்துக்கு அவன் ஆற்ற வேண்டிய கடமையா? அல்ஜீரிய தேசிய விடுதலைக்கு அவன் செய்ய வேண்டிய இலட்சியப் பணியா? இறுதியில் விடுதலை உணர்வு மேலோங்கியது. ஒரு ட்ரக் வண்டி நிறைய பிரெஞ்சு இராணுவ ஆயுதங்களை எடுத்துக் கொண்டு புரட்சியாளருடன் போய்ச் சேர்ந்து விட்டான். அடிமையாக ஏகாதிபத்திய அரசுக்குத் தொண்டு செய்தவன் இப்போது புது உலகம் படைக்கும் புரட்சியாளனுயினுன்.

பின்னர் கெரில்லாக்கள் பிரெஞ்சுப் படையுடன் நடாத்திய சண்டை ஒன்றின்போது காயமுற்றுக் கைதானுன் சாகூன். அவன் மேஜர் லார்சனிடம் கொண்டு வரப்பட்டான். பிரெஞ்சு அரசுக்கு எதிராக அவன் செய்த குற்றத்திற்காக அவனுக்கு இராணுவச் சட்டப்படி மரணதண்டனை வழங்க வேண்டும். அதேவேளை அவன் ஒரு அல்ஜீரியனுக இருந்திருந்தால் ஒரு புரட்சியாளனுகவே இருந்திருப்பான் என்ற புரட்சி பற்றிய நியாயம் மேஜர் லார்சனை அலைக்கழித்தது.



▲ விடுதலையின் பின் அல்ஜீரிய மக்களின் வெற்றி ஊர்வலம்.

இறுதியில் இராணுவ நீதி மன்றத்தில் சாகூனைக் கையளித்தான் மேஜர் லார்சன். அவனுக்கு மரண தண்டனை வழங்கப்பட்டது. தன் தாய் நாட்டிற்காக மரணத்தை மகிழ்வுடன் ஏற்றுன் சாகூன். தந்தை பிரெஞ்சு ஏகாதிபத்தியத்திற்காக வீர மரணம் அடைந்தான். அதே ஏகாதிபத்தியம் அவனது மகனைப் பலி வாங்கியது. அன்றே மேஜர் லார்சன் தனது கமான்டர் பதவியை ராஜினுமாச் செய்துவிட்டு, இராணுவத்திலிருந்து விலகி, தாய்நாட்டுக்குக் கப்பல் ஏறினுன்.

## அரபுலகின் விடிவெள்ளி

பிரெஞ்சு அரசாங்கம் கெரில்லா நடவடிக்கைகளை முறியடிப்பதில் தோல்வி கண்டது. எனவே புரட்சிவாதிகளுடன் சமாதான உடன்படிக்கை செய்துகொள்ளப் பேச்சுவார்த்தைகளைத் தொடங்கியது. அல்ஜீரியாவை பிரான்சின் கீழ் தொடர்ந்து வைத்திருக்கும் நோக்குடன் O. A. S. (Organisation Armée Secrète) எனும் இயக்கம் அல்ஜீரியாவில் உருவாகியது. ஐரோப்பியக் குடியேறிகள் இருவர் இதனை ஆரம்பித்தனர். இதன் அதிரடிப் படை டெல்ரா கொமான்டோஸ் (Delta Commandos) எனப்பட்டது. அல்ஜீரிய மக்களுக்கும், சமாதானம் செய்ய விரும்பும் பிரெஞ்சு அரசியல்வாதிகளுக்கும் எதிரான பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டது. அல்ஜீரிய பொதுமக்களையும், புத்திஜீவிகளையும் கொன்று, சமாதானப் பேச்சுவார்த்தைகளைக் குழப்பி, யுத்தத்தை நீடிக்க நடவடிக்கைகளை எடுத்தது.

அல்ஜீரியப் போராட்டக் காலத்தில் பிரான்சில் பிரான்சிஸ் ஜோன்சன் என்பவர் தலைமையில் பிரெஞ்சுக்காரரின் இயக்கம் ஒன்று செயல்பட்டது. அது புரட்சிகரக் கருத்துக்களைக் கொண்டிருந்தது. பிரெஞ்சுத் தொழிலாள வர்க்கம், தேசியப் பொருளாதார வளர்ச்சி காரணமாக முன்னேற்றமடைந்து 3-ம் உலக நாடுகளின் மக்களைச் சுரண்டும் முதலாளி வர்க்கமாக மாறிவிட்டதென்ற கருத்தை முன் வைத்தது இத்தீவிர இடதுசாரி இயக்கம். எனவே பிரான்சிலுள்ள புத்திஜீவிகள், புரட்சிகரச் சக்திகள், ஏழை நாட்டு மக்களின் விடுதலைப் போராட்டங்களுக்கு ஆதரவளிக்க வேண்டும் என வற்புறுத்தியது. F. L. N.-கு ஆயுதங்கள், பணம் ஆகியவற்றைக் கடத்தியும், அல்ஜீரிய விடுதலை தொடர்பான அறிக்கைகள், பிரச்சாரம் மூலமாகவும் அல்ஜீரியப் புரட்சிக்குத் தமது ஆதரவை வெளிப்படுத்தியது.

அல்ஜீரியாவை பிரான்சின் ஆட்சியின் கீழ் தொடர்ந்து வைத்திருக்க வேண்டுமெனப் பிரெஞ்சு அரசாங்கத்தை வற்புறுத்துமுகமாக அல்ஜீரியாவில் கிளர்ச்சிகள் இடம் பெற்றன. 1958, 1961-ம் ஆண்டுகளில் பிரெஞ்சு இராணுவத்தில் ஒரு

தொடர்ச்சி 10ம் பக்கம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



9ம் பக்கம் தொடர்ச்சி

பகுதியினர் சில தளபதிகளின் தலைமையில் இக்கிளர்ச்சிகளில் ஈடுபட்டனர்.

# புரட்சி மலர் அல்ஜீரியா

ஏராளமான உயிரிழப்பு, பண விரயம், பொருளாதார வீழ்ச்சி என்பன யுத்தத்தை தொடர்ந்து நடாத்துவதற்கு எதிராக பிரான்சில் மக்கள் அபிப்பிராயத்தை திருப்பியது. கெரில்லா எதிர்ப்பு நடவடிக்கைகள் தோல்வி உற்றமை, சித்திரவதைகளுக்கு எதிராக சமாதானவாதிகளின் போராட்டங்கள், இராணுவத்தினர் பலர் இராணுவத்தை விட்டு ஓடியமை போன்றவை பிரான்சின் ஜனாதிபதி சாள்ஸ் டீ கோலே கெரில்லாக்களுடன் சமாதானப் பேச்சு வார்த்தைக்குத் தூண்டின.

சமாதானப் பேச்சுவார்த்தைகள் 20 மே 1961 ல் பிரான்சில் ஆரம்பமாயின. பேச்சுவார்த்தைகளில் F.L.N. இறுக்கமாக நடந்து கொண்டது. உடன் யுத்த நிறுத்தம் என்ற பிரெஞ்சு நிபந்தனை மறுக்கப்பட்டது. சமாதான உடன்படிக்கையில் ஓர் அம்சமே யுத்தநிறுத்தம் என்று F.L.N. வலியுறுத்தியது. 3 யூலை 1962ல் சமாதான உடன்படிக்கை ஏற்பட்டு, யுத்தநிறுத்தம் மேற்கொள்ளப்பட்டது. பிரெஞ்சுப் படைகளும், பெரும்பாலான ஐரோப்பியக் குடியேறிகளும் அல்ஜீரியாவை விட்டு வெளியேறினர். அல்ஜீரியா சுதந்திர நாடாகியது. சுதந்திரக் குடியரசு சமதர்மப் பாதையில் செல்ல ஆரம்பித்தது.

பத்து இலட்சம் மக்களைப் பலி கொடுத்து அல்ஜீரியா, ஏகாதிபத்திய பிடியிலிருந்து விடுதலை பெற்றது. அல்ஜீரிய மக்களின் வீரமிகு போராட்டத்தின் வெற்றியினால் வட ஆபிரிக்காவில் தென்னாபிரிக்கக் குடியரசைப் போல் நிறபேத, சிறுபான்மை, வெள்ளையர் அரசு உருவாவது தடுக்கப்பட்டது.


பயங்கரவாத நடவடிக்கைகளுக்கென F.L.N. இன் கீழ் ஒரு குழு இயங்கியது. அக்குழு வேறொரு புறம்பான இயக்கமாக வெளிப் பார்வைக்குச் செயல்பட்டது.



கஸ்பாவின் குறுந் தெருவில் ▲ பிரெஞ்சு பாரசூட் வீரன்.

இருளிலிருந்து தாக்கிவிட்டு மக்கள் கூட்டத்தினுள் மறைந்துவிடுதல், வெடிகுண்டு கள் வைத்தல், வாகனங்களைக் கடத்துதல், பணயக் கைதிகளைப் பிடித்தல், பதுங்கிச் சுடுதல் போன்ற நடவடிக்கைகளுக்கு அல்ஜியர்ஸ் நகரம் சாதகமான சூழ்நிலையைத் தந்தது. ஒரு பிரெஞ்சுக்காரன் வீட்டில் வேலை செய்யும் ஒரு அல்ஜீரியன் பகலில் வேலைக்காரனாகவும், இரவில் கெரில்லாவாகவும் மாறும் சந்தர்ப்பங்களும் அங்கிருந்தன. அல்ஜீரிய மக்கள் தமது போராட்டத்தை பிரான்சுக்குள்ளும் கொண்டு போயினர். பாரிஸ் போன்ற நகரங்களில் அரசியல் கொலைகள், குண்டு வெடிப்புகள் ஆகியவற்றை நடத்தினர்.

F. L. N. கெரில்லாக்கள் குருட்டுத் தனமாகத் தாக்கவில்லை; தேர்ந்தெடுத்த இலக்குகளையே தாக்கினர். பிரெஞ்சு ஆயுதப் படையினர், தமக்கெதிரான ஐரோப்பியக் குடியேறிகள், தாய் நாட்டைக் காட்டிக் கொடுக்கும் துரோகிகள் — இவர்களையே சுட்டுக் கொன்றனர். அல்ஜீரியப்




அல்ஜியர்ஸில் F. L. N. இன் குண்டுத் தாக்குதல்கள் ▲

புரட்சியை வெளியரங்கமாக ஆதரித்த பிரெஞ்சு தத்துவ அறிஞர் ஜோன் போல் சாத்தர், புரட்சிவாதிகளால் மேற்கொள்ளப்படும் கொலைகளை நியாயப்படுத்திக் கூறினார்.

**ஓர் ஐரோப்பியனை ஒரு புரட்சியாளன் கொல்லும் போது ஒரே கல்லில் இரு மாங்காய்களை வீழ்த்துகிறான். அடக்குபவனை அழிக்கும் அதே வேளை அவன் தனது அடிமைத்தனத்தையும் அழிக்கிறான்."**

(To shoot down a European is to kill two birds with one stone, to destroy an oppressor and the man he oppresses at the same time.) முற்றும்.

நன்றி:- 'போர்க்குரல்'

எமது வெளியீடான SOLT பற்றிய விமர்சனங்களையும் வெளியிடுவதற்கான ஆக்கங்களையும் நாம் தமிழ் பேசும் மக்களிடமிருந்து எதிர்பார்க்கிறோம். உங்கள் விமர்சனங்களையும் ஆக்கங்களையும்

"ஆசிரியர்குழு SOLT "

என விலாசமிட்ட கடித உறையிலிட்டு எமது முழு நேர ஊழியர் எவரிடமாவது கொடுத்து விடவும்.

நன்றி.